1984 மார்ச் 13]

பல்தொழில் பயிலகங்களில் முறை வேலை படிப்பு.

* 84 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வரும் கல்வியாண்டிலிருந்து, பல்தொழில் பயிலகங்களில் முறை வேலை முறையை அமல் நடத்த, அரசு முடிவு செய்துள்ளதா ?

(இ) நடப்பாண்டில் எத்தனை பாலிடெக்னிக்குகளில் முறை வேலை முறை அனுமதிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981-82 பள்ளியாண்டு முதல் அண்ணாமலை நகர் முத்தையா பாலிடெக்னிக்கிலும், மற்றும் செட்டிநாடு அண்ணா பாலிடெக்னிக்கிலும் ஷிப்டு முறை பரிட்சார்த்தமான முறையில் புகுத்தப்பட்டது. இம்முறை திருப்திகரமாக இயங்கி வருவதால், 1983-84 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட ஐந்து பாலிடெக்னிக்குகளிலும் இம்முறை புகுத்தப்பட்டிருக்கிறது :—

1. சி.ஐ.டி. சேண்டுவிச் பாலிடெக்னிக், கோயம்புத்தூர்

2. ஈ. எஸ்.வி. நாடார் பாலிடெக்னிக், விருதுநகர்

3. நாச்சிமுத்து பாலிடெக்னிக், பொள்ளாச்சி

4. செங்கல்வராயன் நாய்க்கர் பாலிடெக்னிக், சென்னை

5. இராமகிருஷ்ணா வித்யாலயா பாலிடெக்னிக், கோவை.

மற்ற பாலிடெக்னிக்குகளுக்கு விரிவுபடுத்துவது குறித்து உரிய தருணத்தில் ஆய்வு செய்யப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இவைகள் அனைத்தும் தனியார் பாலிடெக்னிக்குகளாகவே இருக்கின்றன. அரசு பாலிடெக்னிக்குகளிலும் இத்தகைய ஷிப்ட் முறையைப் புகுத்தும் உத்தேசம் உண்டா ? நீலகிரியில் உள்ள பாலிடெக்னிக்கிலும் ஷிப்ட் முறையைப் புகுத்தி அதிகமான மாணவர்கள் படிப்பதற்கான வாய்ப்பு உருவாக்கித் தரப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசு பாலிடெக்னிக்குகளிலும் ஷிப்ட் முறையைக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அது குறித்து அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. நீலகிரி பாலிடெக்னிக்கைப் பொறுத்தவரையில், அது புதிதாகத் துவங்கப்பட்டிருக்கிற காரணத்தால், அங்கே எல்லாவிதமான வசதிகளும் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு, இதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, ஷிப்டு முறையை இந்தக் கல்வி ஆண்டிலிருந்து பல் தொழில் பயிலகங்கள் நடைமுறைப்படுத்துவதால், அங்கே போதிய அளவுக்கு ஆசிரியர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற ஆசிரியர்களை வைத்தே ஷிப்ட் முறையைத் துவங்குவது என்று முடிவு செய்திருக்கிறோம். அந்த ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்ட பிறகுதான் அவர்கள் இதற்கான விண்ணப்பத்தை அனுப்பவேண்டும் என்றும் அதன் பிறகுதான் அரசு அதைப் பரிசீலிக்கும் என்றும் சொல்லியிருக்கிறோம். எனவே ஆசிரியர்கள் எதிர்ப்பார்களானால், நாம் இதைக் கொண்டுவர முடியாது.

பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் கழிப்பிட வசதிகள்.

* 85. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தருமபுரி மாவட்டத்தில், அரூர், பென்னாகரம் பெண்கள் உயர் நிலைப்பள்ளிகள் உள்ளிட்டு, 90 சதவிகிதம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியைகட்கும், பள்ளிச் சிறுமிகட்கும் கழிப்பிடங்கள் ஏதுமின்றி அவலமான நிலையில் உள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இக்குறைபாடுகளைக் களைய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள 9 அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளிகளில் உலர் முறை கழிப்பிட (Dry Latrines) வசதிகள் ஓரளவு உள்ளன என்றும் ஆனால் இவை ஏதும் அவலமான நிலையில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு உயர்நிலைப்பள்ளிகளில் கழிப்பிட வசதிகளைச் சீர் செய்வதற்கு இவ்